# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2084 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10

*2084 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1640* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1644* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1636* | ஏல விற்பனைகள் | *1647* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1639* | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - பருத்தித்துறை

பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை

*பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமைகோரப்படாததுமான பொருட்கள் எதிர்வரும் 2018.09.15 ஆம் திகதி மு.ப.09.30 மணிக்கு பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**நிபந்தனைகள் :-**

*1. ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களை பதிவாளரின் அனுமதியுடன் பொது மக்கள் பார்வையிட முடியும்.*

*2. ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தேசிய ஆள் அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களின் மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.*

*3. விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் மன்றின் வளாகத்திருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.*

*4. ஏலத்தில் விற்கப்படும் பொருட்களானது உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*(திருமதி) நளினி சுபாகரன்,*
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*பருத்தித்துறை.*

**ஏலவிற்பனைக்கான பொருட்களின் விபரம்**

| தொடர் இல. | வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | AR 222/17 | துவிச்சக்கர வண்டி இலக்கம் தெளிவில்லை | 1 |
| 2 | AR 229/17 | துவிச்சக்கர வண்டி இலக்கம் தெளிவில்லை | 1 |
| 3 | AR 231/17 | துவிச்சக்கர வண்டி இலக்கம் தெளிவில்லை | 1 |
| 4 | AR 520/17 | துவிச்சக்கர வண்டி இல. 69272372 (பெண்கள்) | 1 |
| 5 | A16/18 | துவிச்சக்கர வண்டி இல. 69781134 லுமாலா (ஆண்கள்) | 1 |
| 6 | AR 60/18 | துவிச்சக்கர வண்டி இல. 69911518 (ஆண்கள்) | 1 |
| 7 | AR 63/18 | துவிச்சக்கர வண்டி இல. 57186780 லுமாலா (பெண்கள்) | 1 |
| 8 | 29461 | துவிச்சக்கர வண்டி இலக்கம் தெளிவில்லை | 1 |
| 9 | 29805 | துவிச்சக்கர வண்டி இல. 69826559 லுமாலா (ஆண்கள்) | 1 |
| 10 | 29992 | துவிச்சக்கர வண்டி இலக்கம் தெளிவில்லை | 1 |
| 11 | 25615 | துவிச்சக்கர வண்டி இல. 69793135 (சேதம்) | 1 |
| 12 | B 204/2014 | துவிச்சக்கர வண்டி இல. B111085839 | 1 |
| 13 | 28678 | NP JS 9877 கையுழவு இயந்திரம் செசி இல.: K550A-18417<br>எஞ்சின் இலக்கம் : கண்டுபிடிக்க முடியவில்லை | 1 |

| தொடர் இல. | வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 14 | A-445/17 | NPWQ 8934 JIALLING மோட்டார் சைக்கிள் செசி இல. : LAAAXKFB8B0000167 எஞ்சின் இல. : JL 1 P47FMF7511A017356 | 1 |
| 15 | A-62/18 | NP HG 1009 மோட்டார் சைக்கிள் செசி இல. : N3303f437783 எஞ்சின் இல. : N3303M440322 | 1 |
| 16 | A-61/18 | NP HN 9055 மோட்டார் சைக்கிள் செசி இல. : MD624DE2532K00162 எஞ்சின் இல. : OE2H32000081 | 1 |
| 17 | A-511/16 | NPVM 5758 மோட்டார் சைக்கிள் செசி இல. : MBLHA11EH99J06386 எஞ்சின் இல. : HA11EA99J12566 | 1 |
| 18 | A-385/17 | NP JS 8269 மோட்டார் சைக்கிள் செசி இல. : MD626AG154ZN84460 எஞ்சின் இல. : OG1N42177936 | 1 |
| 19 | A-495/17 | NP BER 8001 மோட்டார் சைக்கிள் செசி இல. : OSLO 8M 16881 எஞ்சின் இல. : OSL09C25912 | 1 |
| 20 | A-374/17 | NPMB - 2986 TVS மோட்டார் சைக்கிள் செசி இல. : MD624AH1852B14531 எஞ்சின் இல. : OH1A52212173 | 1 |
| 21 | A-375/17 | NP HC 3555 BOXER மோட்டார் சைக்கிள் செசி இல. : DFFBJB70103 எஞ்சின் இல. : DFMBJB76924 | 1 |
| 22 | A-377/17 | NP GQ 2314 TVS மோட்டார் சைக்கிள் | 1 |
| 23 | A-378/17 | NP GP 4473 TVS மோட்டார் சைக்கிள் செசி இல. : N3205F096295 எஞ்சின் இல. : N3205M096841 | 1 |
| 24 | A-383/17 | NP HY 2181 BAJAJ மோட்டார் சைக்கிள் செசி இல. : MD2A11CZ9CCF33773 எஞ்சின் இல. : DHZCCE99226 | 1 |
| 25 | A-384/17 | 105 -8593 HONDA MD90 மோட்டார் சைக்கிள் செசி இல. : MD90- 1707002 எஞ்சின் இல. : MD90E-1707930 | 1 |
| 26 | A-310/17 | NP HB - 1375 HERO HONDA மோட்டார் சைக்கிள் செசி இல. : O3A21C31357 எஞ்சின் இல. : O3A21M29690 | 1 |
| 27 | A-311/17 | NP HZ 2378 HERO HONDA மோட்டார் சைக்கிள் செசி இல. : 04D09C04134 எஞ்சின் இல. : 03C21M05864 | 1 |
| 28 | A-309/17 | NP HT 5409 மோட்டார் சைக்கிள் செசி இல. : 04A09C07449 எஞ்சின் இல. : 04A0SM06921 | 1 |
| 29 | A-261/16 | 500-2797 JIALLING மோட்டார் சைக்கிள | 1 |
| | | NP GS 4376 TVS மோட்டார் சைக்கிள் செசி இல. : N3207F145616 எஞ்சின் இல. : N3207M146335 | 1 |
| | | NP HE 9647 TVS மோட்டார் சைக்கிள் செசி இல. : N3303F43779 எஞ்சின் இல. : N3302M430183 | 1 |
| 30 | A-571/16 | NP MO 0416 HERO HONDA மோட்டார் சைக்கிள் செசி இல. : 05L09C25912 எஞ்சின் இல. : 05L08M16881 | 1 |
| 31 | 28347 | NP BDE 4673 HONDA மோட்டார் சைக்கிள் செசி இல. : ME4JF486KF8003590 எஞ்சின் இல. : JF48E81037609 | 1 |
| 32 | A-303/16 | NP ZQ 4739 ZONGO மோட்டார் சைக்கிள் | 1 |
| 33 | A-386/17 | HERO HONDA மோட்டார் சைக்கிள் | 1 |
| 34 | A-308/17 | TVS VICTOR மோட்டார் சைக்கிள் | 1 |
| 35 | A-379/17 | NP GQ 2238 TVS மோட்டார் சைக்கிள் செசி இல. : N3112F021437 எஞ்சின் இல. : N3112M021355 | 1 |

| தொடர் இல. | வழக்கு இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 36 | A-72/18 | NP TD 1141 BAJAJ மோட்டார் சைக்கிள் செசி இல. : MD2DSDSZZNCF93151 எஞ்சின் இல. : DSGBNF90999 | 1 |
| 37 | A-51/15 | NP WO4585 BAJAJ மோட்டார் சைக்கிள் செசி இல.: MD2DHDJZZUCA02067 எஞ்சின் இல : DJGBUA54750 | 1 |
| 38 | A-468/16 | படகு OFRP (வெள்ளை & நீலம்) | 1 |
| 39 | 26687 | சவள் | 3 |
| 40 | 26688 | சவள் | 3 |
| 41 | 28424 | சவள் | 1 |
| 42 | 29043 | சவள் | 1 |
| 43 | 29642 | சவள் | 1 |
| 44 | 29983 | சவள் | 2 |
| 45 | 29985 | சவள் | 2 |
| 46 | 30099 | சவள் | 2 |
| 47 | 30542 | மண்வெட்டி | 4 |
| | | சவள் | 1 |
| 48 | 30985 | மண்வெட்டி | 1 |
| | | சவள் | 1 |
| 49 | 31358 | சவள் | 2 |
| 50 | 31404 | சவள் | 3 |
| 51 | 31619 | சவள் | 2 |
| 52 | 31882 | சவள் | 3 |
| 53 | 31248 | சவள் | 2 |
| 54 | 30740 | சவள் | 2 |
| 55 | 30988 | சவள் | 3 |
| 56 | 30620 | சவள் | 1 |
| 57 | 31575 | சவள் | 1 |
| 58 | 31953 | சவள் | 1 |
| 59 | 30882 | சவள் | 2 |
| 60 | AR 306/17 | கையடக்க தொலைபேசி (SAMSUNG) | 1 |
| 61 | 30337 | கையடக்க தொலைபேசி (NOKIA) | 1 |
| 62 | B 204/14 | கையடக்க தொலைபேசி (SONY ERISON) | 1 |
| 63 | 29992 | கோடரி | 1 |
| | | கத்தி | 1 |
| 64 | 26437 | கத்தி (பெரியது) | 1 |
| 65 | 29461 | கத்தி | 2 |
| 66 | 30673 | கோடரி | 1 |
| | | கத்தி | 2 |
| 67 | 28970 | சாறி | 33 |
| | | சல்வார் | 26 |
| | | ரீசேட் | 09 |
| | | குழந்தைகளின் ஆடைகள் | 24 |

பதிவாளர்,

நீதிவான் நீதிமன்றம்,
பருத்தித்துறை.
2018.07.20

8-382

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2019

பல்லே வரதொல இலக்கம் 01

*மேற் குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையை 2019, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 இல் பிரசுரிக்கப்பட்டதும். நடைமுறையிலுள்ள பொது விதிமுறைகளுக்கு அமைவாகவும், கீழ் குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கேள்விப்பத்திரங்கள் விற்க முடியாவிடின் 2018, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.*

*விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரித்து கீழ்க் குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்கான பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடது மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரும், இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப் பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்வி பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் "பெயருக்கு பதிவுத் தபாலில்" அனுப்புதல் வேண்டும்.*

*கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரக்காரர்கள் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரங்கள் விற்கப்படும் தினமான 2018, ஓகத்து மாதம் 30ஆந் திகதி கேள்விப்பத்திரகாரர்கள் சமுகளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணியுடன் முடிவடையும், எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர்கள் "எவர்" என அறிந்தவுடன் அன்றைய தினத்தில் மு.ப. 2.00 மணிக்கு முன்பாக அக் கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதான கணிக்கப்படும் தொகையை பிணைப் பணமாக வைப்பு செய்தல் வேண்டும். அத்தோடு "குத்தகை நிபந்தனையில்" கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.*

*கே. பிரகீத் குலதிலக,*
*பிரதேச செயலாளர்,*
*படல்கும்புர,*

*பிரதேச செயலகம்,*
*படல்கும்புர,*
*2018, யூலை 17.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரமும் மூடும் நேரமும் | வைப்புத் தொகை | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லே வராதோல கமேவெல | மு.ப. 11.00 மணி முதல் பிற் பகல் 2.00 மணி வரை பி. ப. 4.00 முதல் பி. ப. 8.00 மணி வரை | ரூபா 500.00 | 2018.08.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை |

*8 - 328*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர்: செலென்ட்டெ வெஷர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீ வீ 00201433
கூட்டிணைப்புத் திகதி : 2018.07.01
பதிவு முகவரி : இல. 50C, முதலாம் மாடி, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு.

திமித்ரா ஷாலு அர்தெஸ் குமார்,
கம்பனிச் செயலாளர்.

8 - 274

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின் றது .-

கம்பனியின் பெயர்: த கார்வர் ஃபெர்னிச்சர் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201124
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.06. 20
பதிவு முகவரி : இல. 292/6, தம்பெ, மடபாத்த, பிலியந்தலை

கம்பனிச் செயலாளர்கள்.

8- 278

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர்: லேயின் பான் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201362
ஆரம்பிக்கப்பட்ட திகதி : 2018.06. 26

கம்பனிச் செயலாளர்கள்.

8- 310

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது .-

கம்பனியின் பெயர்: ஆசிஆட்டா டிஜிட்டல் லப்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201847
கம்பனியின் பதிவு அலுவலக முகவரி : இல. 475, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018, யூலை 10

ஆசி ஆட்டா டிஜிட்டல் லப்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8- 311

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர்: ஃபோர்சூன் இன்வெஸ்ட்மண்ட் ட்ரஸ்ட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00200121
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.05.04
பதிவு முகவரி : இல. 447ஏ, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

கம்பனிச் செயலாளர்.

8- 313

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: எஸ்.எச்.ஏ. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201408
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.01
பதிவு முகவரி : இல. 168/1, லோவர் வீதி, Orr"s Hill, திருகோணமலை.

த்ரீ எம் அசோஷியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

8- 315

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ரைட் ஓல் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00201797
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.09
பதிவு முகவரி : இல. 424/7C, பலன்வத்த, பன்னிப்பிட்டிய

த்ரீ எம் அசோஷியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-316

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: பார்ட்டம் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201586
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.05
பதிவு முகவரி : இல. 35F, வெஸ்ட் டவர், உலக வர்த்தக மையம், கொழும்பு 1

த்ரீ எம் அசோஷியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-317

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: கௌனி ஹேஎண்ட்லும்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201154
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.06.21
பதிவு முகவரி : இல. 27/49, சுகதராம மாவத்தை, சிங்ஹாரமுல்ல, களனிய

கம்பனிச் செயலாளர்.

8-325

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்க் காணும் கம்பனி கூட்டிணைப்பு செய்துள்ளமை தொடர்பான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: றொசெல்மோ சுப்பர் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 130793
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.03.16
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட
முகவரி : இல. 1119, தலங்கம தெற்கு, தலவத்துகொட

சபையின் கட்டளைப்படி,

சம்பத் சமிந்த கமகே,
கம்பனிச் செயலாளர்.

8-340

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்க் காணும் கம்பனி கூட்டிணைப்பு செய்துள்ளமை தொடர்பான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: குலோபல் ஒடோவேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 131351
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.04.02
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட
முகவரி : இல. 754, வலயம் 2, மில்லேனியம் சிட்டி, அத்துருகிரிய

சபையின் கட்டளைப்படி,

சம்பத் சமிந்த கமகே,
கம்பனிச் செயலாளர்.

8-341

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டதற்கான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: ரித்மா எக்ரோ புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201723
பதிவு செய்யப்பட்ட முகவரி : வின்வூட் டீ தொழிற்சாலை, நம்பபன, இங்கிரிய
ஸ்தாபிக்கப்பட்ட திகதி : 2018.07.07

கம்பனியின் பெயர்: ரித்மா டீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201725
பதிவு செய்யப்பட்ட முகவரி : வின்வூட் டீ தொழிற்சாலை, நம்பபன, இங்கிரிய
ஸ்தாபிக்கப்பட்ட திகதி : 2018.07.07

கம்பனியின் பெயர்: விஷன் கிராமீன் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201881

பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.162, பல்லேகம, நாவலப்பிட்டி
ஸ்தாபிக்கப்பட்ட திகதி : 2018.07.11

8- 372

---

**பகிரங்கஅறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: கெவினி க்லோதின் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201507
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.03
பதிவு அலுவலகம்: லெவல் 37, மேற்கு டவர், உலக வர்த்தக மத்திய நிலையம், கொழும்பு 01, இலங்கை

கம்பனிச் செயலாளர்.

8- 374

---

**அறிவித்தல்**

ரிஜன்சி ரெக்ரியேஷன் சென்டர் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ7 2075) என்பதையும் சுமிகோ லங்கா ஹொடெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 9209) என்பதையும் ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவின் நியதிகளின்படி ரிஜன்சி ரெக்ரியேஷன் சென்டர் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் சுமிகோ லங்கா ஹொடெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்பவற்றை ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் கொடுக்கின்றோம். இதன் விளைவாக சுமிகோ லங்கா ஹொடெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாகவிருக்கும். ஒன்றிணைவானது 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதியன்று பயனுடையதாக வந்தது. ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 7, வோட் பிளேஸ், 79 ஆம் இலக்கத்தில் இருக்கும்.

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8- 375

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: வெவ் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம்: பீவீ 00202036
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.15
பதிவு முகவரி : இல. 03, முதலாம் மாடி, 336, காலி வீதி, கொழும்பு 3

சபையின் கட்டளைப்படி,

எப். ஜே. அன்ட் ஜி த சேரம்,
சட்டத்தரணி.

8- 401

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: டெக்னிட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 111260
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.01.13
பதிவு முகவரி : இல.420, 2/1, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5

சபையின்கட்டளைப் பிரகாரம்,

மெய்தாஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்.

2016, பெப்புருவரி.

8- 402

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி நிறுவப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: ரன்பிம கெபிடல் ஹோல்ட்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201920
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல.308, ஹுனுகொட்டுகம, மகா உடகம, கம்பொலை

கம்பனிச் செயலாளர்.

8- 408

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள தனியார் நிறுவனம் 2010 ஆம்

ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆம் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: கண்டி கூல் எயார் டெக்னொலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டட்.

கம்பனி இலக்கம்: பீவீ 75184

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல.214A, தன்னெவெல்லா, மினிகமுவா, கலகெதர

கம்பனிச் செயலாளர்.

8- 409

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: சிலோன் கிரேஃபயின் டெக்னொலோஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00200923

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.06.12

பதிவுமுகவரி : 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

கம்பனிச் செயலாளர்.

8- 416

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

ஹோமாகம, பனாகொட, ஹைலெவல் வீதி, 785/1 ஐச் சேர்ந்த தற்போது Australia, Victoria, Narre Warten 3505. Sweeney Drive 120 ஐச் சேர்ந்த ஷியாமலி விஜேசேகர திமுன் அக்கரவிற்ற (746510071V) ஆகிய நான், 2004 ஆம் இலக்க சட்ட தொழில்சார் சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைவாக அவுஸ்திரேலியா சட்ட செயற்பாட்டாளராகிய செனானி குருகுலரட்னே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், அவுஸ்திரேலியா, விக்டோரியா வீதி, 2009.02.17 ஆம் நாளன்று Berwick 3806, Glenview Rise, 17 ஐச் சேர்ந்த பிரசன்ன நாமல் குருகுலரட்னே என்பவர் மற்றும் Narre warten 3805, Sweeney Drive 120 ஐச் சேர்ந்த அலெஸ்லி விஜேசேகர ஆகிய சாட்சிகளின் முகதாவில் அத்தாட்சிப்படுத் தப்பட்டு ஹோமாகம பனாகொட, ஹைலெவல் வீதி, 785/1 ஐச் சேர்ந்த எனது தாயாராகிய மங்கலிகா சுதசிங்ஹ (4751022568V) என்பவரை எனது அற்றோணித்தத்துவக்காரராக நியமித்த விஷேட அற்றோணித்தத்துவத்தை நான் இல்லாதொழித்து இரத்துச் செய்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன். மேலும் மேற்கூறப்பட்ட அற்றோணித்தத்துவமானது இதுமுதற்கொண்டு வறிதாக்கப்பட்டு சட்டரீதியாக அமுலாக்கப்படமாட்டாது.

தரங்க ஷியாமலி விஜேசேகர திமுன் அக்கரவிற்ற.

2018.03.25.

8- 275

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் 84, ஹேபர்ட் வீதி, டென்டெநேன்ங் 3175, விக்டோரியா மாநிலம், அவுஸ்திரேலியா, தற்போது மன்னார் வீதி, பூவரசன்குளம், வவுனியா வைச் சேர்ந்த சவரி அந்தோனிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி அந்தோனிப்பிள்ளை ஆகிய நாங்கள், பிரசித்த நொத்தாரிசு நிமலினி அம்பிகாயிபாலனினால் அத்தாட்சிப்படுத்தியதும், பூவரசகுளம், வவுனியா விலாவைச் சேர்ந்த முத்தையா விஜேந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்டதுமான 1996.02.29 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச்செய்தும் வறிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றோம்.

சவரி அந்தோனிப்பிள்ளை,
பரமேஸ்வரி அந்தோனிப்பிள்ளை.

2018.05.23.

8- 324

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலக்கம் 262ஏ, பொரலெஸ்ஸ, லுணுவிலவில் வசிக்கும் (தே.அ.அ.இல. 776760188V) வர்ணகுலசூரியகே நீட்டா குசும் ருத்ரிகூ ஆகிய நான், இலக்கம் 167/3, கெரவ்வ வீதி, பொரலஸ்ஸவில் வசிக்கும் (தே. அ. அ. இல. 855470160V) வர்ணகுலசூரிய நிமல்கா ருத்ரிகூ என்பவருக்கு வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு திரு. ஆர். என். ஜே. பிரனாந்து அவர்களினால் 2017.02.01 அன்று இத்தாலி ரோட் ஸ்தானிகராலயத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென அறிவித்துக் கொள்கின்றேன்.

வர்ணகுலசூரியகே நீட்டா குசும் ருத்ரிகூ .

8- 342

---

**அற்றோணித் தத்துவத்தினை மீளப்பெறல்**

இத்தாற் சகலரும் அறிந்த இல. 5, விகார மாவத்தை சிங்காரமுல்லை, களனியை சேர்ந்த ரணசிங்க எட்டியாரச்சிகே மாலினி பெரேரா (தே.அ.அ.இல. 647880401 V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துவதாவது,

2015 ஆவணி மாதம் 1 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம்.ஏ. எகயந்த அவர்களினால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திர இல. 3367 இல் இல. 13 கோகிலவத்தை, அங்கொடையில் வசிக்கும் ரணசிங்க எட்டியாராச்சிகே லால் பத்ம சிறி பெரேரா (தே.அ.அ.இல. 622280299V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ பத்திரத்தினை உடனடியாக இத்தால் வாபஸ் பெற்று இரத்து செய்கின்றேன்.

ரணசிங்க எட்டியாரச்சிகே மாலினி பெரேரா.

8 - 407

### அற்றோணித் தத்துவத்தை இரத்து செய்தல்

கம்பஹா பிரசித்த நொத்தாரிஸ் ஜீ. உபுல் நந்தன பெரேராவால் 2013ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி உறுதி செய்யப்பட்ட 1000 என்ற இலக்கத்தையுடைய அற்றோணி அதிகாரத்திற்கிணங்க கிரிந்திவெல, மயிலவலான பாதை, இலக்கம் 29 என்ற இடத்தில் வசிக்கும் கேரகல ஆரச்சிகே சுஜத் சமன் ஸ்ரீலால் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 583622020V ) என்ற நான், கிரிந்திவெல, மயிலவலான பாதையில் இலக்கம் 29 என்ற இடத்தில் வசிக்கும் பெதுருக் அத்துகோரளலாகே குணவதி அல்லது பெதுருக் அத்துகோரளகே குணவதி (தேசிய அடையாள அட்டை இலக்கம் 385690436V ) என்பவருக்கு அதிகாரமளித்திருந்த அற்றோணி அதிகாரத்தினை முழுமையாக இரத்துச் செய்துள்ளதாக இத்தால் சகலருக்கு அறியத்தருகின்றேன்.

மேலும், பெதுருக் அத்துகோரளலாகே குணவதி அல்லது பெதுருக் அத்துகோரளகே குணவதியால் மேற்படி அற்றோணி அதிகாரத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சகல செயல்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இதன் பின்னர் நான் எவ்வித பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என இத்தால் அறிவிக்கன்றேன்.

கேரகல ஆரச்சிகே சுஜத் சமன் ஸ்ரீலால் .

8 - 410

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்து செய்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பிரதான காரியாலயம், இலக்கம் 46, கண்டி வீதி, கிரிபத்கொடை, களனி எனும் முகவரியில் நடாத்திச் செல்லப்படுகின்ற வரையறுக்கப்பட்ட கெமா இன்டர்னஷனல் தனியார் கம்பனியினால் இலக்கம் 01, நூலகசாலை மாவத்தை, குளியாபிட்டிய எனும் இடத்தில் வசிக்கும் முதுகுட ஆரச்சிகே தொன் சுரங்க தில்ருக் (தேசிய அடையாள அட்டை இலக்கம்) என்வருக்கு வழங்கப்பட்டிருக்கும் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் குருநாகலில் அமைந்திருக்கும் வடமேல், வடமத்திய வலய அலுவலகத்தின் புத்தகஇலக்கம் 2502 தொகுதி இலக்கம் 22 இல் நாளேட்டு இலக்கம் 831 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு ஹெட்டிகமகே கெலும் தர்மகீர்த்தி என்பவரால் எழுத்தி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 852 மற்றும் 2008.09.18 ஆந் திகதி கொண்ட அற்றோணித்தத்துவம் உடனே அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

வரையறுக்கப்பட்ட கமா இன்டர்நஷனல் தனியார் கம்பனி சார்பாக,

1. நிஹால் காமினி விஜேரத்ன, பணிப்பாளர்
2. அகில அன்ஜன விஜேரத்ன, பணிப்பாளர்

இலக்கம் 46,
கண்டி வீதி, கிரிபத்கொடை,
களனி.
2018, ஓகத்து 03.

8 - 788/2

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்து செய்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பிரதான காரியாலயம், இலக்கம் 46, கண்டி வீதி, கிரிபத்கொடை, களனி எனும் முகவரியில் நடாத்திச் செல்லப்படுகின்ற வரையறுக்கப்பட்ட கெமா இன்டர்னஷனல் தனியார் கம்பனியினால் இலக்கம் 01, நூலகசாலை மாவத்தை, குளியாபிட்டிய எனும் இடத்தில் வசிக்கும் முதுகுட ஆரச்சிகே தொன் சுரங்க தில்ருக் (தேசிய அடையாள அட்டை இலக்கம்) என்வருக்கு வழங்கப்பட்டிருக்கும் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் குருநாகலில் அமைந்திருக்கும் வடமேல், வடமத்திய வலய அலுவலகத்தின் புத்தகஇலக்கம் 2501 தொகுதி இலக்கம் 22 இல் நாளேட்டு இலக்கம் 831 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு ஹெட்டிகமகே கெலும் தர்மகீர்த்தி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 852 மற்றும் 2008.09.18 ஆந் திகதி கொண்ட அற்றோணித்தத்துவம் உடனே அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

வரையறுக்கப்பட்ட கெமா இன்டர்நஷனல் தனியார் கம்பனி சார்பாக,

1. நிஹால் காமினி விஜேரத்ன, பணிப்பாளர்
2. அகில அன்ஜன விஜேரத்ன, பணிப்பாளர்

இலக்கம் 46, கண்டி வீதி, கிரிபத்கொடை, களனி.
2018.08.03.

8 - 788/1

---

# அந்நியக் குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

## மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2018

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2010, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. எந்தவொரு பிரதேச செயகலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்கள் வரை செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகைக் காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்டேப்பல் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரிச் சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

" மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2019"

2018.09.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) இலக்கம் | (ஆ) பிரிவு | (இ) மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | (ஈ) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (உ) மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஊ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | (எ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | (ஏ) விற்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலிப் பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந் துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 | 5,000 | மு.ப. 10.30 | 2018.09.17 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **குறிப்பு**.- 2018.09.17 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2018.11.16ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

எச். ஆர்.எச். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2018, யூலை .

8-461

---

## அந்நிய மதுபான தவறணை குத்தகை விற்பனை- 2019

சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பிக்கப் படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக மூடப்பட்ட உறையில் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................. இலக்கம்கொண்ட ........................ அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு 2018.08 .27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் பிரதேசச் செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. 2019 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணை குத்தகை நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2018.08.27 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைவாக இதுவரை விற்கப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2018.09 .07 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032- 2223205 - 2222138.

டி.எம்.ஏ. கே.திசாநாயக்க,
பிரதேச செயலாளர்.
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்.
2018, யூலை 23.

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் | மீள் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 07, பிடிபன தெரு, சிலாபம் | 2018.08.27 மு.ப. 10.30 | 2018.09.07 மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி<br>பி.ப.5.00 | பி.ப.2.00 முதல் பி.ப. 5.00 வரை<br>பி.ப. 8.00 முதல் மு.ப. 11.00 வரை | 1,500 |
| சிலாபம் | இல. 06, பிடிபன தெரு, சிலாபம் | 2018.08.27 மு.ப. 10.30 | 2018.09.07 மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி<br>பி.ப.5.00 | பி.ப.2.00 முதல் பி.ப. 5.00 வரை<br>பி.ப. 8.00 முதல் மு.ப. 11.00 வரை | 1,500.0 |

8-412

# ஏல விற்பனைகள்

**டிஎப்சிசி வங்கி பீஎல்சீ**
**(முன்னர் டிஎப்சிசி வங்கி என அழைக்கப்பட்டது)**
**பெறுமதிமிக்க சொத்து**
**ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

6291 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்.-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளை, பள்ளே பற்று, மஹரகம மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, தலவத்துகொட கிராமத்தில் அமைந்துள்ள, தெல்கஹவத்த என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் பீ. முனசிங்க அவர்களால் வரையப்பட்ட, 1998, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட 9734A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 05 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ. 23.75பே. (0.0602 ஹெக்டயர்) அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக ஹோமாகம காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்படும் காணியின் ஊடாகச் செல்லும் பாதையின் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் உரிமையுடன், தலவத்துகொட கிராமத்தில் அமைந்துள்ள, தெல்கஹவத்த என அழைக்கப்படும், 9734A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 03 (பாதைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.8.72பே. (0.0220 ஹெக்டயர்) ஹோமாகம காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு அத்துல வலிசுந்தர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆந் திகதிய 6291 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைந்த இல. PV15441 எனப் பதிவு செய்யப்பட்ட ஹோமாகமயில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள (இதன் பின்னர் 'கம்பனி' என அழைக்கப்படும்) சன்பெக் இஞ்ஜினியர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெ நிறுவனத்தினால்.

டிஎப்சிசி வங்கி பீஎல்சீ க்கு (டிஎப்சிசி வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சிசி வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி

2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு முறை**: ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 01% விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 106,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 1000;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2371371 என்னும் தொலைபேசி மூலம் டிஎப்சிசி வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிகுள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
126 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

8- 276

**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் படி ஏல விற்பனை*

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ,சல்பிட்டி கோரளையில், பல்லே பத்து கோரளையில் கொழும்பு மாநகர சபை எல்லையில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள, பொரல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவு, கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம்: 60A டாக்டர் என். எம். பெரேரா மாவத்தை (முன்பு கோட்டா ரோட்) நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்கவின் 09.02.1985 ஆந் திகதியையுடைய வரைபட இலக்கம் 1757 இல் காண்பிக்கப்பட்ட லொட் A2 (வீதியை அகலப்படுத்திய பிறகு) மீண்டும் அளந்து நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்கவின் காண்பிக்கப்பட்ட லொட் A2A காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ் (ஏ0ஏ.0றூ.7.66பே.) இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து, கொழும்பு மாவட்ட காணி பதிவகத்தில் A729/164 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடன் எடுத்த/காணியை ஈடு வைத்த போதஹன்டி லொயிட் ஜினரன்ஜன் த சில்வா எம். டி.பி. எஸ். கருணாநாயக்கவின் 26.08.2011 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 4200 மூலம் இதற்கு மேல் விபரிக்கப்பட்ட காணியை நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு-02 இற்கு ஈடு வைத்துள்ளார், மற்றும் கொல்லப்பட்ட போதஹன்டி லொயிட் ஜினரன்ஜன் த சில்வா செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் கொடுப்பனவை மீளபெற்றுக் கொள்ள,

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேல் சொல்லப்பட்ட காணியை 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு எங்களால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்**.- கொட்டா ரோட் என்று சொல்லப்பட்ட பிரதான ரோட்டில் தற்சமயம் டாக்டர் என்.எம். பெரேரா மாவத்தையில் ஒரு 300 மீட்டர் பொரல்ல சந்தியில் இருந்து சென்று பிறகு இக்காணி வலது பக்கம் உள்ளது. சம்பந்தப்பட்ட ஆதனம் இலக்கம் 60A யில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தம் விதம்**.- ஏல முடிவில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) முடிந்த ஏலத் தொகையில் 10%;
(2) மிகுதி 90%, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி PLC பிரதான காரியாலயத்தில் ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5%;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு செலவுகள் 100%;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா.1000;
(7) நொத்தாரிஸ் கட்டணம் ரூபா 2500.00.

மேலதிக விபரங்களுக்கு.- சட்டப்பிரிவு, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02, தொ. பே. 011-4218745.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200, 2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலை பேசி /தொலைநகல் இல.: 077-3181891, 077- 3242954, 011- 2445393.

8-279

---

**செலான் வங்கி பீ. எல்.சீ. - ஹொரண கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

"கடன்பட்டோர்" என்ற வகையில் களுத்துறையைச் சேர்ந்த உடகம லியனகே உபுல் சாந்த என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பி. எல். சீ. க்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

**1 ஆம் ஏல விற்பனை**

தென் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோரள, உடுகஹ பத்து ,ஹொரண பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இங்கிரிய பிராந்திய செயலாளர் பிரிவில் இங்கிரிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவு 620, உருகலவில் ( தற்போதைய இங்கிரிய) இங்கிரிய - இரத்தினபுரி பிரதான வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 39 A ''புவக்வத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் யூ. திலகா நந்தனி என்பவரால் தயாரிக்கப்பட்டு 2017.09.16 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2403 இல் துண்டு 31A சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற மணல், பயிர்த்தோட்டங்கள், கட்டடங்கள்,

மரங்கள் மற்றும் அனைத்துடனும் பன்னிரெண்டு தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.12.95பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 2403 இல் துண்டு 31A ஐக் கொண்டுள்ளது.

விதிமுறைகளுக்கமைய அதன் மேலாகவும் அதனூடாகவும் பற்றிய விபரங்கள் அனுமதி பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. அகன்ஹம என்பவரால் தயாரிக்கப்பட்டு 1983.12.04 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3064 துண்டு 12 இல் குறிப்பிடப் பட்டுள்ளது.

**மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2018, செத்தெம்பர் 06 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.**

**காணியைச் சென்றடைகின்ற விதம் :** இங்கிரிய நகரம் அல்லது அரசமர சந்தியில் இருந்து இரத்தினபுரி வீதி மார்க்கமாக 200 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும். இந்த சொத்து வீதியில் சாரங்கா லேனஸ் கடந்ததும் இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

### 2 ஆம் ஏல விற்பனை

தென் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பஸ்துன் கோரள ஹன்காபொட பத்து புளத்சிங்களவில் அமைந்துள்ள "பமுனுகஹாஹேன" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பி.டீ. குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1997.11.10 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1084 இல் துண்டு F சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற மணல், பயிர்தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் முப்பத்திமுன்று தசம் நான்கு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.33.4பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளது.

**மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2018, செத்தெம்பர் 06 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன் .**

**காணியைச் சென்றடைகின்ற விதம் :** இங்கிரிய நகரில் இருந்து இரத்தினபுரி வீதி மார்க்கமாக 1 கி.மீ. சென்றால் 34/1 ஆம் கட்டை வழியாக வலதுபக்கமாக திரும்பி ஈகலோயா வீதி மார்க்கமாக ஈகலோயா நோக்கி செல்கையில் 9 கி.மீ. தூரத்தில் குறிக்கப்பட்ட சொத்து வலது பக்கத்தில் அமைந்திருக்கும்.

### 3 ஆம் ஏல விற்பனை

தென் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோரள கும்புகே பத்து ஹொரண நகர சபை எல்லைக்குட்பட்ட பிராந்திய செயலாளர் பிரிவில் ஹொரண கிராம அலுவலர் பிரிவு 615 A , ஹொரண - அங்குருவதொட்ட வீதியில் வரிமதிப்பீட்டு இல. 169 , 169 1/1 இல் அமைந்துள்ள "தெல்கஹாகொடெல்ல அல்லது தெல்கஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ.பி. ஜயசூரியா என்பவரால் தயாரிக்கப்பட்டு 2015.07.02 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 6566 இல் துண்டு A சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற மணல், பயிர்த்தோட்டங்கள், கட்டடங்கள், மரங்கள் மற்றும் அனைத்துடனும் பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 6566 இல் துண்டு A கொண்டுள்ளது.

தென் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோரள கும்புகே பத்து ஹொரண நகர சபை எல்லைக்குட்பட்ட பிராந்திய செயலாளர் பிரிவில் ஹொரண கிராம அலுவலர் பிரிவு 615 A , ஹொரண - அங்குருவதொட்ட வீதியில் வரிமதிப்பீட்டு இல. 169A, இல் அமைந்துள்ள "தெல்கஹாகொடெல்ல அல்லது தெல்கஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ. பி. ஜயசூரியா என்பவரால் தயாரிக்கப்பட்டு 2015.07.02 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 6566 இல் துண்டு B சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற மணல், பயிர்தோட்டங்கள், கட்டடங்கள், மரங்கள் மற்றும் அனைத்துடனும் ஆறு தசம் ஆறு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.6.6பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 6566 இல் துண்டு B கொண்டுள்ளது.

**மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2018, செத்தெம்பர் 06 ஆந் திகதி மு . ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.**

**காணியைச் சென்றடைகின்ற விதம் :** ஹொரண நகரிலிருந்து அங்குருவத்தோட்ட வீதி மார்க்கமாக 500 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடது கைப்பக்கத்தில் அமைந்திருக்கும். இந்த சொத்து ஹொரண தக்சிலா கொலேஜ் விளையாட்டு மைதானம் முன்னால் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு:** 2018.06.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2018. 06. 14 ஆந் திகதிய "டெயிலி மிரர் " மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2018.06.18 ஆந் திகதிய "தினக்குரல் " பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 1,000 ரூபா.
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு
கொள்வனவு விலையின் மிகுதி 90 % அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்;

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த

தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை"தலைமை செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல.90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள் ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456463, 011- 2456481.

''மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்''

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 2572940.

8-367

---

**செலான் வங்கி பீ. எல்.சீ. - ஹொரண கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

"கடன்பட்டோர் " என்ற வகையில் களுத்துறையைச் சேர்ந்த உடகம லியனகே உபுல் சாந்த என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பி. எல். சீ. க்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

**1 ஆம் ஏல விற்பனை**

தென் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோரள, உடுகஹ பத்து , ஹொரண பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹொரண பிராந்திய செயலாளர் பிரிவில் ஹுருகொட கிராம அலுவலர் பிரிவு 617A, ஹுருகொட கிராமத்தில் அமைந்துள்ள ''பேர்த் எஸ்டேட்டில் மீமனபலன பிரிவு'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். விதாரனகே என்பவரால் தயாரிக்கப்பட்டு 2016.11.25 மற்றும் 2016.11.28 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 6579 இல் துண்டு AB4 சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள் பயிர்தோட்டங்கள் மணல் மற்றும் அனைத்துடனும் நிலவரைபட இல. 6579 இல் துண்டு AB4 பதினான்கு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.14பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளது.

